[1992 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 92. திரு. ஆர். முருகையா பாண்டியன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

92—

தச்சநல்லூர் ரெயில்வே மேம்பாலம்.

*2631 திரு. ஆர். முருகையா பாண்டியன்,

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி ஜங்ஷன் வடக்கே உள்ள தச்ச நல்லூர் ரெயில்வே கேட் போக்குவரத்தை முன்னிட்டு மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகத்திலே வளர்ந்து வரக்கூடிய நகரங்களில் திருநெல்வேலி ஒரு முக்கியமான நகர மாகும். ஆனால் அங்கே நாளுக்கு நாள் ஜனத்தொகையும், வாகனங்களும் பெருத்துக்கொண்டிருக்கின்றன. திருநெல்வேலி யிலிருந்து மதுரைக்கும், மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கும் வரவேண்டுமென்றால் அங்கே இருக்கின்ற தச்சநல்லூர் ரெயில்வே கேட் அடிக்கடி அடைப்பதன் காரணமாக போக்கு வரத்து அதிகமாகி இடைஞ்சலை ஏற்படுத்துகின்றன. எனவே நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் அங்கே ஒரு மேம்பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாடு திட்டத் தின் கீழ் திருநெல்வேலியில் அமைக்கப்படுகின்ற இன்னர் ரிங் என்று சொல்லப்படுகின்ற அந்த உள் வட்டச் சாலையில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் இன்றைக்கு தீட்டப்பட்டு அதற்கான நடைமுறைகளை இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம், அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்

டிருக்கின்றன். அது தவிர தேசிய நெடுஞ்சாலை பிரிவு மூலம் அமைக்கப்போகும் திருநெல்வேலி பை-பாஸ் என்று சொல்லப் படுகின்ற புறவழிச்சாலையில் மற்றொரு ரெயில்வே மேம்பாலம் அமைக்கின்ற திட்டமும் பரிசீலனையில் உள்ளது. ஆகவே, தச்சநல்லூர் ரெயில்வே கேட்டுக்கு மேம்பாலம் அமைக்க அவசியம் இல்லை என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93. திரு. பி.வி. இராஜேந்திரன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

93—

ஊராட்சி ஒன்றியங்களுக்கு டிராக்டர்.

*5429 திரு. பி. வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் டிராக்டர் வழங்கி அதனை விவ சாயிகளுக்கு வாடகைக்கு வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு டிராக்டர் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

முற்பகல் 10-20

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்பு சட்டத்தை நமது தேசிய கொள்கை வாயிலாக ஏற்று இன்றைக்கு, குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்திலெல்லாம் மிகப் பெரிய, நிலவுடமை எல்லாம் தகர்ந்து சிறு மற்றும் குறு விவசாயிகள் நிலம் உள்ளவர்களாக ஆகி இருக்கின்ற இந்த நேரத்தில் எல்லா ஒன்றியங்களிலும் டிராக்டர் இல்லை. இரண்டாவதாக, தனியாரிடம் போனால் ஒரு மணி நேரத்திற்கான வாடகை மிக அதிகமாக, அவர்களிட மிருந்து வசூல் செய்யப்படுகிறது. இரண்டு மூன்று ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு நிச்சயமாக டிராக்டர்கள் நமது அக்ரோ என்ஜினியரிங் வாயிலாகக்கூட கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. அதனால் கூடுதலாக, ஜெனரல் பண்ட் அதிகமாக இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவாவது டிராக்டர்களை வழங்கவேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.